செய்தி வெளியீடு எண் : 844 நாள்: 16.11..2009

# பத்திரிக்கைச் செய்தி

தாட்கோ, செயற்பொறியாளர்கள் ஆய்வுக் கூட்டம் இன்று 16.11.09 காலை 11.00 மணியளவில் தலைமைச் செயலக புதிய கட்டிடத்தில் உள்ள வேளாண் கூட்டரங்கில் மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் திருமதி ஆ.தமிழரசி அவர்களின் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் 2008–09 ஆம் ஆண்டு நிதியாண்டில் நபார்டு வங்கியின் கடனுதவியோடு செயல்படுத்தபடும் திட்டங்களின் கீழ் ஆதிதிராவிடர் கிராமங்களுக்கு அடிப்படை வசதிகள் அமைத்து தர ரூபாய் 110 கோடியே 87 லட்சம் ஒதுக்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டதன் முன்னேற்றம் குறித்தும், ஆதிதிராவிடர் நல பள்ளிகளில் உட்கட்டமைப்புகளை மேம்படுத்த ரூபாய் 50 கோடியே 14 லட்சம் ஒதுக்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டதன் முன்னேற்றம் குறித்தும் ஆய்வு செய்யப்பட்டது. மேலும் 2008–09 மற்றும் 2009–10 ஆம் ஆண்டில் 50 ஆதிதிராவிடர் நல விடுதிகளுக்கு புதிய கட்டிடம் கட்டுவதற்கு ரூபாய் 25 கோடி ஒதுக்கப்பட்டது. ஒதுக்கப்பட்ட நிதியில் இதுவரை கட்டப்பட்ட கட்டிடங்களின் தற்போதைய நிலை குறித்தும் விவாதிக்கப்பட்டது. மேலும் பணிகளை உடனடியாக செய்து முடிக்கும்படியும் செயற் பொறியாளர்களுக்கு மாண்புமிகு அமைச்சரவர்கள் அறிவுறுத்தினார்கள். மேலும் பழங்குடியினர் நலனுக்காக விடுதி கட்டிடங்கள், பள்ளி கட்டிடங்கள், ஆய்வக கட்டிடங்கள், குடியிருப்புகள், பணியாளர்கள் குடியிருப்புகள், சுற்றுச்சுவர்கள் மற்றும் தடுப்பணைகள் கட்டுதல் ஆகிய பணிகள் ரூபாய் 6 கோடி செலவில் நடைபெற்று வருகிறது. அப்பணிகளின் முன்னேற்றம் குறித்தும் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை முதன்மை செயலாளர் திரு விஷ்வநாத் ஷெகாவ்கர்,இ.ஆ.ப., ஆதிதிராவிடர் நலத்துறை ஆணையர் திரு பொ.சிவசங்கரன்,இ.ஆப., பழங்குடியினர் நலத்துறை இயக்குநர் திரு ரவீந்திரன்,இ.வ.ப., தாட்கோ மேலாண்மை இயக்குநர் திரு சந்திரகாந்த் பி.காம்ப்ளே,இ.ஆ.ப., மற்றும் தாட்கோ உயரதிகாரிகள் கலந்து கொண்டனர்.

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சரின்
சிறப்புநிலை நேர்முக உதவியாளர்.

**********

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, தலைமைச் செயலகம்,சென்னை–9.